# அத்தியாயம் 3

## உலக சனத்தொகையின் பிரதான இயல்புகள்


குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் மக்கள் தொகை திரண்டிருக்கும் பாங்கினை சனத்தொகை என வரைவிலக்கணப் படுத்தலாம். உலக சனத்தொகையின் பிரதான பண்புகள் சில இனங்காணப் பட்டுள்ளன. அவையாவன சனத்தொகை பருமன், பரம்பல், அமைப்பும் கட்டமைப்பும், வளர்ச்சி, மாற்றம் மற்றும் நகர்வு என்பனவாகும்.

## 3.1 உலக சனத்தொகைப்பருமன்

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த சனத்தொகை வரையறுக்கப்பட்ட தொன்றாகவே காணப்பட்டது. இடையர் காலம், வேடுவர்காலங்களில் மனித வாழ்க்கைக் கோலம் இடத்திற்கு இடம் சென்று உணவைச் சேகரிக்கும் வாழ்க்கை முறையாகவே இருந்தது. ஆங்காங்கே பரவிக் காணப்பட்ட சிறிய குழுக்களாகவே அன்றைய சனத்தொகை காணப்பட்டது. மனித வாழ்க்கைக்கோலம் பண்டங்களை சேகரித்தலுக்குப் பதிலாக உணவுப்பண்டங்களை உற்பத்தி செய்யும் முறைவரை வேறுபட்டு வந்ததனால். உலக சனத்தொகையில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. நாடோடி வாழ்க்கை வாழ்ந்த மனிதன் நிலையாக ஓரிடத்தில் நீண்ட காலம் வாழப் பழகிக் கொண்டான். சனத்தொகையின் ஏக பங்காளியாக காணப்படும் மனிதன், மனித வளமாக பௌதிக வளங்களுக்கு உழைப்பின் மூலம் பெறுமதியை வழங்குகின்றான். எனவே காலப்போக்கில் மனித வளத்தின் பெறுமதி முன்னைவிட உயர்ந்துள்ளது. இன்று சனத்தொகைப் பருமனானது உயர்ந்துள்ளது. 21 ஆம் நூற்றாண்டில் உலக சனத்தொகை 7 பில்லியனை அண்மித்துள்ளது.


## கண்டங்களின் அடிப்படையில் சனத்தொகைப் பருமன்

உரு இல 3.1 கண்டங்களின் அடிப்படையில் சனத்தொகைப்பருமன்




மூலம்:- http://enwikipedia.org/wiki/List of country by population -2011.

தேசப்படம் 3.1: உலக சனத்தொகை பருமன்




மூலம்: குணசேன பிலிப்ஸ் உலகப் படப் புத்தகம் - புதிய பதிப்பு - 2003

## பிரதேச அடிப்படையில் உலக சனத்தொகைப் பருமன்

பிரதேச அடிப்படையில் உலகின் சனத்தொகை பருமனை அவதானிப்பின் பல்வேறு வேறுபாடுகளைக் காணலாம். பிரதேசங்களில் காணப்படும் பல்வேறு வேறுபாடுகள் சனத்தொகையின் பருமனில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. காலநிலை, கனியவளம், மண் போன்றவற்றை உதாரணமாகக் கூறலாம். உலகின் பல்வேறு வலயங்களிலும் சனத்தொகைப் பருமனில் காணப்படும் வேறுபாட்டை பின்வரும் அட்டவணை (3.1) புலப்படுத்தும்.

அட்டவணை 3.1 பிரதேச ரீதியில் சனத்தொகைப் பருமன் (மில்லியனில்)

| வருடம் | உலகம் | ஆபிரிக்கா | ஆசியா சீனாவைத் தவிர | வட அமெரிக்கா | இலத்தின் அமெரிக்கா | ஐரோப்பா | ஒசானியா |
|---|---|---|---|---|---|---|---|
| 2011 | 6921 | 995 | 4140 | 529 | 386 | 739 | 36 |

மூலம்:- http://enwikipedia.org/wiki/List of country by population.

## தென் ஆசியாவின் சனத்தொகைப் பருமன்

உலக சனத்தொகையை பிரதேச ரீதியாக மட்டுமன்றி பிரதேசத்தினுள் அமைந்துள்ள நாடுகளின் ரீதியிலும் காட்டலாம். நாடுகளினுள்ளே சனத்தொகைப் பருமனில் வேறுபாடுகள் காணப்படுகின்றன என்பதைப் பின்வரும் அட்டவணை 3.2 காட்டுகிறது.

அட்டவணை 3.2 தென் ஆசியாவில் நாடுகளுக்கிடையே சனத்தொகை பரவியுள்ள முறை - 2010 (மில்லியன்களில்)

| வருடம் | தென் ஆசியா | இந்தியா | பாகிஸ்தான் | பங்காளா தேஷ் | நேபாளம் | இலங்கை | பூட்டான் | மாலைதீவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2011 | 1579.9 | 1210.2 | 179.2 | 142.3 | 26.6 | 20.6 | 0.7 | 0.3 |

மூலம்:- http://enwikipedia.org/wiki/List of country by population.

## பருமன் அடிப்படையில் சனத்தொகையில் முதன்மை பெறும் நாடுகள்

பருமன் அடிப்படையில் உலகின் சனத்தொகை கூடிய 23 நாடுகள் இனங் காணப்பட்டுள்ளன. அங்கு சனத்தொகை 100 மில்லியனை விட அதிகமாகும். அவற்றில் ஆறு நாடுகள் ஆசியாவில் காணப்படுகின்றமை விசேட அம்சமாகும்.

அட்டவணை 3.3
சனத்தொகையில் முதன்மை பெற்ற நாடுகள் 2010 (மில்லியன்களில்)

| நாடுகள் | சனத்தொகை (மில்லியனில்) |
|---|---|
| சீனா | 1,347.3 |
| இந்தியா | 1210.2 |
| ஐக்கிய அமெரிக்கா | 313.3 |
| இந்தோனேசியா | 237.6 |
| பிறேசில் | 192.4 |
| பாகிஸ்தான் | 179.2 |
| நைஜீரியா | 162.5 |
| ரஷ்யா | 142.3 |
| பங்காளதேஷ் | 143.0 |
| யப்பான் | 127.6 |

மூலம்: http://enwikipedia.org/wiki/List of country by population - 2011.04.02

2050 ஆம் ஆண்டாகும் போது உலக சனத்தொகையைப் பருமனுக்கேற்ப ஒழுங்கு வரிசைப்படுத்தினால் முக்கிய நாடுகளுள் இந்தியா முதலாம் இடத்தை பெறும்.தற்போது முதலிடத்திலுள்ள சீனா இரண்டாம் இடத்திற்கு தள்ளப்படும் தற்போது மூன்றாம் இடத்திலுள்ள ஐக்கிய அமெரிக்கா அதே இடத்தில் காணப்பட ஒன்பதாம் இடத்தை வகிக்கும் நைஜீரியா நான்காம் இடத்தைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. பின்வரும் அட்டவணை (3.4) அதனைப் புலப்படுத்துகிறது.

அட்டவணை 3.4 எதிர்வு கூறப்பட்ட சனத்தொகைப்பருமன் 2050
(மில்லியன்களில்)

| நாடுகள் | சனத்தொகை | நாடுகள் | சனத்தொகை |
|---|---|---|---|
| இந்தியா | 1628 | இந்தோனேசியா | 285 |
| சீனா | 1437 | பிரேசில் | 260 |
| ஐக்கிய அமெரிக்கா | 420 | பங்களாதேஷ் | 231 |
| நைஜீரியா | 299 | கொங்கோ குடியரசு | 183 |
| பாகிஸ்தான் | 295 | எதியோப்பியா | 145 |

மூலம்: U.S.Census International Data Base 2006

**செயற்பாடு:**

- அட்டவணை 3.2 இனைப் பயன்படுத்தி தென்ஆசிய வலயத்தின் மொத்த சனத்தொகையில் ஒவ்வொரு நாடும் கொண்டுள்ள பங்கினை சதவீதமாக கணித்து பொருத்தமான வரைபு ஒன்றின் மூலம் காட்டுக.
- இவ்வரைபின் மூலம் புலனாகும் இயல்புகளை விமர்சிக்குக.

## 3.2 சனத்தொகைக் கட்டமைப்பு

சனத்தொகைக் கட்டமைப்பு என்பது சனத்தொகையில் உள்ளடங்கும் ஆண் பெண் அளவினை வயதுத்தொகுதி அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுவதோடு திருமணநிலை, கல்விக் கட்டமைப்பு இன, மதக் கட்டமைப்பு என்பனவற்றையும் உள்ளடக்குவதாகும்.

சனத்தொகையில் ஆண்களின் எண்ணிக்கையும், பெண்களின் எண்ணிக்கையும் சனத்தொகைக் கட்டமைப்பு மூலம் விளக்கப்படுகின்றது. இது சனத்தொகையின் பாலமைப்பு என அழைக்கப்படும். இது சனத்தொகையின் வயதமைப்புடன் இணைந்துள்ளது. ஒரு நாட்டின் சனத்தொகையை வயது, பாலடிப்படையில் வகைப்படுத்திக் காட்டும் அட்டவணை “சனத்தொகைக் கூம்பு” எனப்படும். அதில் காணப்படும் பல்வேறு தொகுதிகளும் வயது மட்டங்களின் அடிப்படையில் ஊழியப்படை, தங்கி வாழ்வோர் என பிரித்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும்.

14 வயதிற்கு உட்பட்ட சிறுவர் தங்கி வாழ்வோர்.


15 - 64 வயது வரை உள்ளோர் ஊழியப்படை.

65 வயதுக்கு மேற்பட்ட முதியோர் தங்கி வாழ்வோர்

சனத்தொகைக் கட்டமைப்பானது சமனற்றுப் பரம்பிக் காணப்படுவதால் சனத்தொகைக் கூம்பு பல்வேறு வடிவங்களை பெறும். அவற்றுள் இனங்காணப்பட்ட முக்கிய மூன்று வடிவங்கள் பின்வருமாறு.


| சாதாரண கூம்பு | நிலையான கூம்பு | அடிப்பக்கம் ஒடுங்கிய கூம்பு |
|---|---|---|

உரு இல 3.2 சாதாரண கூம்பு





- 14 வயதுக்கு உட்பட்ட தங்கி வாழ்வோர் அதிகம்.
- 65 வயதுக்கு மேற்பட்ட தங்கி வாழ்வோர் குறைவு.
- அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அடிப்பக்கம் அகன்ற கூம்பு வடிவுடைய சனத்தொகை கட்டமைப்பு காணப்படுகிறது.

உரு இல 3.3 நிலையான கூம்பு




- மிகவும் குறைந்த பிறப்பு, குறைந்த இறப்பு வீதம், காணப்படுவதால் சனத்தொகை வளர்ச்சி குறைவு.
- தங்கி வாழ்வோரில் முதியோர் அளவு அதிகம்.
- இது ஒரு உருளை வடிவம் பெறும்.

உரு இல 3.4 அடிப்பக்கம் ஒடுங்கிய கூம்பு





- இயற்கை வளர்ச்சி வீதம் வீழ்ச்சியுற்றுக் காணப்படும். • வளர்ச்சி வேகம் 1%.
- சிறுவர் தங்கி வாழ்வோர், முதியோர் தங்கி வாழ்வோர் வீதமும் குறைவு.
- பிறக்கும் குழந்தைகளின் அளவுகட்டுப் படுத்தப்பட்டுள்ளது.
- எதிர்காலத்தில் தூண் வடிவினைப் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.


இக்கட்டமைப்பில் சனத்தொகையின் பிறப்பு வீதம், இறப்பு வீதம், சனத்தொகை வளர்ச்சி, சனத்தொகை மாற்றம் என்பன உள்ளடக்கப் பட்டுள்ளன.

## செயற்பாடு:

- சாதாரண சனத்தொகைக் கூம்பில் உள்ளடக்கப்படும் பத்து நாடுகளின் பெயரகளைக் குறிப்பிடுக.
- முதியோர் சனத்தொகை அதிகரித்துள்ளதால் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை எடுத்துக் காட்டுக:
- இறப்பு வீதம் வீழ்ச்சியடைவதற்கான காரணங்கள் மூன்றினை விளக்குக.




A




B

- இக் கூம்பு வடிவங்களில் காணப்படும் நாடுகள் தொடர்பாக தலா மூன்று நாடுகளை தெரிந்து உலக புறவுருவப்படத்தில் குறித்து பெயரிடுக.
- B கூம்பின் அடிப்பக்கம் ஒடுங்குவதற்கான காரணிகள் மூன்றினை விளக்குக.
- A : B ஆகிய கூம்புகள் உள்ளடக்கும் நாடுகளின் சனத்தொகை வயதமைப்பை ஒப்பிடுக.

## 3.3 உலக சனத்தொகைப் பரம்பல்

உலக சனத்தொகைப் பரம்பலில் தெட்டத்தெளிவாக காணக்கூடிய இயல்பு அது சமமற்ற முறையில் பரம்பிக் காணப்படுவதாகும்.


உலகின் பிரதான சனத்தொகை வலயம் உலக நிலப்பரப்பில் 10% தில் காணப்பட்டாலும் அங்கு உலக சனத்தொகையில் 64% மானோர் வாழ்கின்றனர்.

அவுஸ்திரேலியாவில் சனத்தொகை அடர்த்தி சதுர கிலோமீற்றருக்கு 2 பேராகும். இங்கு சனத்தொகை 19 மில்லியனாகும்.

உலக சனத்தொகையில் அரைவாசிப்பேர் 5% நிலப்பரப்பில் வாழ்கின்றனர்.

ஆசியாவில் மட்டும் 60 % மானோர் வாழ்கின்றனர்

உலக சனத்தொகையில் அரைவாசிப்பேர் ஆசியாவில் வாழ்கின்றனர்.




உலக சனத்தொகையில் 60 % பிரதான 10 நாடுகளில் உள்ளது.

வட அரைக்கோளத்தில் வாழும் மக்களில் 50% வட அகலாங்கு $10^0$ - $40^0$ இடையில் வாழ்கின்றனர்.

உலக சனத்தொகையில் 90% மக்கள் வடவரைக்கோளத்தில் வாழ்கின்றனர்.

மேலே காட்டப்பட்டுள்ள சனத்தொகை பற்றிய தகவல்கள் மூலம் உலக சனத்தொகைப் பரம்பலில் வேறுபாடு காணப்படுவது தெளிவாகின்றது.உலக சனத்தொகைப் பரம்பல் குறிப்பிட்ட ஒரு நாட்டில் வாழும் சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டே கணிக்கப்படுகின்றது. ஒரு நாட்டின் சனத்தொகைப் அடர்த்தியினைக் கணிப்பதற்கு அந்நாட்டின் நிர்வாக அலகுகள் அடிப்படையாக கொள்ளப்படுகின்றன.


சனத்தொகை அடர்த்தி என்பது குறிப்பிட்ட நில அலகொன்றில் வாழும் மக்களின் தொகையாகும். இது பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபடும்.

## உலக சனத்தொகை பரம்பலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்

| பௌதிகக் காரணிகள் | மானிடக் காரணிகள் | வரலாற்றுக் காரணிகள் |
|---|---|---|
| காலநிலை.<br>இயற்கைத்தாவரங்கள்.<br>கனியவளம்.<br>நீர். | விவசாயம்<br>கைத்தொழில்<br>உட்கட்டமைப்பு<br>அரச கொள்கை. | பிரதான நாகரீகங்கள்<br>நாடுகாண் பயணங்கள்.<br>குடியேற்றவாதம். |

மேலே உள்ள காரணிகளை அடிப்படையாகக் கொண்டு உலகின் சனத்தொகைப் பரம்பலை 3 வலயங்களாக இனங்காணலாம். இதனை பின்வரும் படம் விளக்குகிறது.

தேசப்படம் இல 3.2 உலக சனத்தொகை அடர்த்தி




மூலம்: John Hancock and Alan Boult, 2001, G..C.S.E Gegraphy Revise Study Guide

## உலகின் சனத்தொகைப்பரம்பல் வலயங்கள்

| சனச்செறிவு கூடிய வலயம் | சனச்செறிவு குறைந்த வலயம் | நடுத்தர சனத்தொகை வலயம் |
|---|---|---|
| • வட, கீழ் ஐக்கிய அமெரிக்கா மேற்கு ஐரோப்பா. | • வட அமெரிக்காவின், வட பகுதி. | • மேற்குறிப்பிட்டவை தவிர ஏனையவை. |
| • தென்கிழக்கு ஆசியா<br>• கிழக்கு ஆசியா வலயம். | • தென் அமெரிக்காவின் மத்தியகோட்டுப்பகுதி.<br>• யூரேசியாவின் வட பகுதி. மத்திய ஆசியப் பிரதேசம்.<br>• அவுஸ்திரேலியாவின் மேற்கு மத்திய வட பிரதேசம். | |


## சனத்தொகைப் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

சனத்தொகைப் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபடும். வட கீழ் ஐக்கிய அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா போன்ற நாடுகளை பாதிக்கும் காரணிகள், தென்கிழக்கு ஆசியா, தென்ஆசியா வலயங்களின் சனத்தொகைப் பரம்பலுக்கான பிரதான காரணியாக அமையாது. தென் ஆசியாவிலும், கிழக்கு ஆசியாவிலும் உலகில் சனத்தொகை கூடிய நாடுகளான சீனா, இந்தியா ஆகிய இரண்டும் அமைந்துள்ளன. இந்த நாடுகள் புராதன காலத்திலிருந்தே குடியிருப்புக்களாக காணப்பட்டமைக்கு சிந்து நாகரீகம், குவாங்கோ நாகரீகம் என்பன சான்று பகரும். வருடத்திற்கு ஒரு முறை பெருக்கெடுக்கும் குவாங்கோ, சிந்து கங்கை நதிகளை அண்டிய பிரதேசங்களில் காணப்படும் வளமான வண்டல் மண் விவசாய நடவடிக்கைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. பருவக் காற்று மழை காரணமாக அயன,அயல் பிரதேசங்களில் காணப்படும் சாதகமான காலநிலைத் தன்மைகளும் விவசாய நடவடிக்கைகளுக்குச் சாதகமாகக் காணப்படுகின்றது. சனத்தொகை அதிகம் காணப்படுவதற்கு இவற்றை முக்கிய காரணியாகக் கொள்ளலாம். இவ்வலயங்களில் கூடிய சனத்தொகை காணப்படுவதற்கு உணவுத் தேவையை பூர்த்தி செய்யக் கூடியதாக இருத்தலும் பிரதான காரணியாக உள்ளது.

பல்வேறு கனிய வளங்கள் காணப்படுகின்றமை அவற்றை பெற்றுக்கொள்ளக் கூடிய தொழினுட்ப திறமை காணப்படுகின்றமை, உட்கட்டமைப்புவிருத்தி, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கைத்தொழில் புரட்சி போன்ற காரணிகளால் மேற்கு ஐரோப்பா, வடகீழ் ஐக்கிய அமெரிக்கா போன்ற பிரதேசங்கள் உலகில்

கைத்தொழில் பிரதேசங்களாக மாறி உள்ளன. இதன் மூலம் ஏற்பட்ட துரித வளர்ச்சி காரணமாக மக்கள் அப்பிரதேசங்களை நோக்கி வந்தமையால் அவை சனச்செறிவு கூடிய இடங்களாக மாறியுள்ளன. இத்துடன் விருத்தியுற்ற கல்வி நிலை, இடைவெப்ப காலநிலை, மீன்பிடி, மரக்கைத்தொழில் போன்றவற்றின் விருத்தி காரணமாக வேலை வாய்ப்புக்கள் அதிகரித்தல் போன்ற காரணிகளும் அப்பிரதேசத்தில் மக்கள் செறிந்து வாழ அதிக வாய்ப்பாய் அமைந்துள்ளன.

உரு 3.5 சனச்செறிவு குறைந்த பாலை நிலப் பிரதேசமொன்று



ஆர்ட்டிக், அந்தாட்டிக் பிரதேசங்களில் சனத்தொகை குறைவாகக் காணப் படுவதற்கான முக்கிய காரணி காலநிலை ஆகும். வெப்பநிலை குறைவாகக் காணப்படுவதே இதற்கான அடிப்படைக் காரணியாகக் கொள்ளலாம். மேற்கு அவுஸ்திரேலியா, சஹாராப்பாலை நிலங்களில் மழைவீழ்ச்சி வரையறுக்கப் பட்டதாக காணப்படுவதால் அது தாவர வளர்ச்சியை பாதித்துள்ளதுடன் அதிக வெப்பமும் வரட்சியும் சனத்தொகை குறைவதற்கு காரணமாயுள்ளது. இந்தியா, சீனா போன்ற நாடுகள் சனத்தொகை கூடிய நாடுகளாக காணப்பட்டாலும் அங்கும் சில பிரதேசங்களில் மேலுள்ள காரணிகளால் சனத்தொகை அற்ற பிரதேசங்களும் காணப்படுகின்றன. உதாரணமாக இந்தியாவின் தார் பாலைநிலம், இமயம் என்பனவும், அந்தீஸ், றொக்கி மலைத்தொடர்கள் என்பனவும் சனத்தொகை அற்ற பிரதேசங்களாக காணப்படக் காரணம் மலைச்சாய்வுகள் கட்டிட நிர்மாணம், நீர்ப்பாசனவசதி போன்ற நிர்மாணப்பணிகளுக்கும் விவசாயத்திற்கும் சாதகமாக காணப்படாமையாகும்.

உரு 3.6 சனச்செறிவு குறைந்த பனிபடர்ந்த பிரதேசமொன்று




அழிக்கமுடியாத அமேசன், குவாங்கோ காடுகளும் சனச்செறிவற்ற பிரதேசங் களாகும். விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமை, சுகாதாரத் துக்குத் தடையாக நோய்களைப் பரப்பும் நுளம்புகள் காணப்படுகின்றமை என்பன இப்பகுதியில் சனத்தொகை குறைவாக காணப்படுப்படுதற்கான காரணங்களாகும். வடவரைக் கோளத்தின் வடபகுதியான அந்தாட்டிக்கா, தண்டரா போன்றவையும் மனித வாழ்க்கைக்குப் பொருத்தமற்ற கடும் குளிர் வலயங்களாக காணப்படுகின்றன.

## கிராமிய நகர சனத்தொகைப் பரம்பல்

உலக சனத்தொகை கிராமிய, நகர ரீதியாகவும் பரம்பியுள்ளது. அதன் முக்கிய இயல்பு அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும் ஒரே சமமாகக் காணப்படாமை ஆகும். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளினதும், அபிவிருத்தி அடைந்த நாடுகளினதும், கிராமிய நகர சனத்தொகைப் பரம்பலை காட்டும் வரைபை (3.7) அவதானிப்பின், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நகர சனத்தொகையில் அளவு அதிகரித்திருப்பதைக் காணலாம்.

உரு இல. 3.7 அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கிராமிய நகர சனத்தொகைப் பரம்பல்.





மூலம்: John Hancock and Alan Boult 2001
G.C.S.E. GEOGRAPAY REVISE STUDY GUIDE

நகர சனத் தொகைப் பரம்பலின் அடிப்படையில் விசேட நகரங்கள் இன்று உலகில் உருவாகியுள்ளன. மில்லியன் நகரங்கள், கூட்டு நகரங்கள் மிகப்பெருநகரங்கள் (மெகா) அவற்றுள் சிலவாகும். 1990ல் 5 மில்லியனுக்கு மேல் சனத்தொகையைக் கொண்ட சுமார் 30 நகரங்கள் உலகில் காணப்பட்டன. அவற்றுள் பெரும்பாலானவை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலே காணப்பட்டமை பிரதான இயல்பாகும்.அண்மையில் உருவான மிகப்பெரு நகரங்கள் (மெகா) 10 மில்லியனிலும் கூடிய சனத்தொகையைக் கொண்ட பாரிய நகரங்களாகும்.இவ்வாறான பாரிய நகரங்களில் பெரும்பாலானவை ஆசியாக் கண்டத்திலே காணப்படுகின்றன. உதாரணம் பீஜிங், மும்பாய், கொல்கத்தா, ஜகார்த்தா, ஒசாக்கா, சியோல், ஷங் காய், டோக்கியோ போன்றன. நிலைய அமைவிடம், பிரதான துறைமுகங்கள், வர்த்தக மத்திய நிலையங்கள், பெறக்கூடிய வளங்கள் உட்கட்டமைப்பு வசதிகள்

சிறந்த முறையில் காணப்படுகின்றமை என்பன சனத்தொகைப் பரம்பல் அதிகரிப்பதற்குக் காரணமாயுள்ளன. எல்லா கண்டங்களிலும் மில்லியன் நகரங்கள் காணப்பட்டாலும் ஆசியா கண்டத்தில் இவை அதிகம் என்பதை பின்வரும் வரைபு காட்டுகிறது.

## உலகில் மில்லியன் நகரங்கள்

உரு 3.8 கண்டங்களின் அடிப்படையில் மில்லியன் நகரங்கள் பரவியுள்ள விதம்.




மூலம்: W.W.W. City Population ole, 2006.11.22 இணையத்தளத்தினூடாக பெறப்பட்டது.

### செயற்பாடு:

1. பின்வரும் மில்லியன் நகரங்களைக் கண்டங்களின் அடிப்படையில் வகைப்படுத்தி உலகப் புறவுருப் படத்தில் அவற்றைக் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| நியூயோர்க் | லண்டன் | சிக்காக்கோ |
| ஷாங்காய் | மெக்சிக்கோ சிற்றி | கேப்டவுன் |
| கொல்கத்தா | டாக்கா | றியோடி ஜெனிரோ |
| டோக்கியோ | சென்னை (மெட்ராஸ்) | புவனர்ஸ் அயர்ஸ் |

2. ஒரே அளவில் வரையப்பட்ட மூன்று உலகப் புறவுருவப் படங்களை பிரதி பண்ணுக. அதில்
   - ❖ சனத்தொகைப் பரம்பல்


- ❖ முக்கிய கைத்தொழில் பிரதேசங்கள், பிரதான நகரங்கள், துறைமுகங்கள்,
- ❖ பிரதான மலைத் தொடர்கள், நதிகள், சமவெளிகள், பாலைநிலங்கள் என்பவற்றை வெவ்வேறாகக் குறித்துப் பெயரிடவும்.

3. சனத்தொகைப் பரம்பல் படத்தை ஏனைய இரண்டு உலகப்படத்திலும் மேல் வைத்து நன்றாக கவனிக்கவும்.
தரைத்தோற்றத்திற்கும் சனத்தொகைப் பரம்பலுக்கும் இடையிலான தொடர்பை விளக்கும் ஒரு அறிக்கை தயாரிக்க.

## 3.4 உலக சனத்தொகை வளர்ச்சி

ஹோமோ சேப்பியன்ஸ் எனும் மனித இனம் இன்றைக்கு பல மில்லியன் வருடங்களுக்கு முன் உலகில் வாழ்ந்தாலும் ஆரம்பயுகங்களில் உலகின் சனத்தொகை தொடர்பாக முறையான தகவல்களைப் பெற முடியாமல் உள்ளது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கான சனத்தொகைக் கணிப்பீட்டின் மூலம் சனத்தொகை வளர்ச்சி தொடர்பான சரியான தீர்மானங்களைப் பெறக் கூடியதாயுள்ளது. இதனடிப்படையில் சனத்தொகை வளர்ச்சி தொடர்பான இயல்புகள் பற்றி பின்வரும் வரைபின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

வரைபு 3.1 உலக சனத்தொகையின் J வடிவ வளையி





மூலம்: http:/www.tribunindia.com/2005/special/tribune_125/ Population - JPG

உலக சனத்தொகை வளர்ச்சியானது நீண்ட காலமாக ஒரு மந்தமான போக்கு காணப்பட்டு பின் குறுகிய காலத்தினுள் துரித வளர்ச்சியுடன் புதிய ஒரு பாதையில் புகுந்துள்ளது எனக்கூறலாம்.

## உலக சனத்தொகையின் இயற்கை வளர்ச்சி

உலகில் 1960ம் ஆண்டு சனத்தொகை 3 பில்லியன் ஆகும். இது 2007 ல் ஏறக்குறைய 7 பில்லியனாக அதிகரித்துள்ளது.2050 ஆகும் போது 9 பில்லியனாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பின்வரும் வரைபு இதனை தெளிவு படுத்தும்.

வரைபு 3.2 உலக சனத்தொகை வளர்ச்சி 1950 - 2050





மூலம்: U.S Census Bureau, International Data Base August 2006

## உலகிலுள்ள முக்கிய பிரதேசங்களின் சனத்தொகை வளர்ச்சி

பல்வேறு ஏதுக்களினால் உலகில் எந்தவொரு பிரதேசத்திலும் ஒரே விதமான சனத்தொகை வளர்ச்சியைக் காணமுடியாது.அது கண்டத்துக்கு கண்டம் வேறுபடுகின்றது. பின்வரும் வரைபை அவதானிப்பதன் மூலம் இதனை கண்டு கொள்ளலாம்.

1900ம் ஆண்டில் ஆபிரிக்கா கண்டத்தின் மொத்த சனத்தொகை உலக சனத்தொகையில் 4.5% மாக காணப்பட்டதுடன், இது 2000ஆம் ஆண்டில் 10%மாக வளர்ச்சியடைந்துள்ளது. ஏனைய கண்டங்களில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை பின்வரும் உருவின் மூலம் அறிய முயலுங்கள்.

உரு 3.9 உலகில் முக்கிய பிரதேசங்களின் சனத்தொகை வளர்ச்சி 1900 - 2000




மூலம்: http: //www.newint.org/issue/309/facts.html

## அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சனத்தொகை வளர்ச்சி


உலக சனத்தொகையின் இன்னொரு சிறப்பியல்பு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளை உள்ளடக்கும் கண்டங்களின் சனத்தொகை வளர்ச்சி விரைவாக அதிகரிப்பதாகும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சனத்தொகை வளர்ச்சி குறைவாக உள்ளதுடன் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சனத்தொகை வளர்ச்சி உயர்ந்த மட்டத்தைக் காட்டுகிறது.

உதாரணமாக பின்வரும் வரைபின்படி 2050 ஆம் ஆண்டில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் சனத்தொகை 8 பில்லியனாக காணப்படும் எனவும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இது 0.6 பில்லியனெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

உலக சனத்தொகை வளர்ச்சியில் தெளிவாக காணக்கூடிய பிரதேசங்களாக, தென், தென்கிழக்கு, கிழக்காசிய வலயங்களைக் காட்டலாம். உதாரணமாக 2006ல் கிழக்காசியாவில் சீனாவினதும், தென் ஆசியாவில் இந்தியாவினதும் சனத்தொகை முறையே 1,312 மில்லியனும் 1,127 மில்லியனும் ஆகும்.

வரைபு 3.3 அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் சனத்தொகை வளர்ச்சி 1750-2100 வரை




மூலம்: Alan Bilham Boult and John Hancock, 2001 G.c.s.c. Geography Revise Study

**செயற்பாடு:**

இந்த அத்தியாயத்திலுள்ள அட்டவணை, வரைபு என்பவற்றுடன் வேறு புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், படங்கள் போன்றவற்றின் மூலமும் தகவல்களைச் சேகரித்து உலக சனத்தொகை வளர்ச்சி. என்ற தலைப்பில் பின்வரும் உப தலைப்புகளோடு ஒரு கையேடு தயாரிக்கவும்.

1. வரைவிலக்கணம்.
2. வரலாறு.
3. வலய அடிப்படை வளர்ச்சி.
4. வளர்ச்சிக்கான காரணிகள்.
5. வளர்ச்சியால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள்.

## சனத்தொகை வளர்ச்சி வேகம்

குறிப்பிட்ட ஒரு நாட்டில் குறிப்பிட்ட ஒரு வருடத்தில் ஏற்படும் இயற்கை வளர்ச்சி வீதம், தேறிய குடிப்பெயர்வு வீதம் ஆகிய இரண்டின் மூலமும் சனத்தொகையில் ஏற்படும் அதிகரிப்பு அல்லது குறைவு வீதம் சனத்தொகை வளர்ச்சி வீதம் எனப்படும்.

உலக சனத்தொகை வளர்ச்சிக்கு பிரதானமாக இரு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.



உலக சனத்தொகை வளர்ச்சி வேகத்தின் இயல்பினை பின்வரும் வரைபு விளக்குகிறது.

அட்டவணை 3.5 உலக சனத்தொகை வளர்ச்சி வேகம்


| | | |
|---|---|---|
| வருடத்திற்கு | - | 7,77,60,000 |
| மாதத்திற்கு | - | 6,4,80,000 |
| நாளொன்றுக்கு | - | 2,16,000 |
| மணித்தியாலத்திற்கு | - | 9000 |
| நிமிடத்திற்கு | - | 150 |

மூலம்: Medindia-calculators World Population Clock http:/ GEOGRAPHY.about.com/od/listsa/2050 pop.htm

## சனத்தொகை வளர்ச்சிக் கட்டங்கள்

மேலுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உலக சனத்தொகை வளர்ச்சியில் நான்கு பிரதான கால கட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றினை பின்வரும் வரைபு காட்டுகிறது.

வரைபு 3.4 சனத்தொகை வளர்ச்சிக் கட்டங்கள்




மூலம்: John Hancock and Alan Boult, 2001, G.C.S.E Geography Revise Study Guide

இந்த கால கட்டங்களில் சனத்தொகையின் பிறப்பு வீதம், இறப்பு வீதம், சனத்தொகை வளர்ச்சி, மாற்றம் என்பன ஒன்றுக்கொன்று வேறுபட்டுள்ளன.

**செயற்பாடு:**

சனத்தொகை வளர்ச்சிக் காலகட்டங்கள் நான்கினதும் முக்கிய இயல்புகளை பின்வரும் உபதலைப்புக்களின் கீழ் கலந்துரையாடுக.

1. பிறப்பு வீதம்
2. இறப்பு வீதம்
3. சனத்தொகை மாற்றம்

முதலாம் கட்டத்துக்கும் நான்காம் கட்டத்துக்கும் இடையிலான வேறுபாட்டை சுருக்கமாகக் குறிப்பிடுக.

## சனத்தொகை இரட்டித்தல்

சனத்தொகை இரட்டிப்பாவதற்கு எடுக்கும் காலத்தை தீர்மானிப்பதில் சனத்தொகை வளர்ச்சி வேகம் செல்வாக்குச் செலுத்துகிறது. அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு இரட்டிப்பாகும் காலம் கூடுதலாகவும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இரட்டிப்பாகும் காலம் குறைவாகவும் காணப்படும்.எனவே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளன.

அட்டவணை 3.6 தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளின் சனத்தொகை இரட்டிப்பாவதற்கு எடுத்த காலம்

| நாடுகள் | 1994 சனத் தொகை | 2015ல் எதிர்பார்க்கும் சனத்தொகை | வருடாந்த வளர்ச்சி | இரட்டிப்படைய எடுக்கும் காலம் |
|---|---|---|---|---|
| சீனா | 1208.1 | 1441.7 | 1.1 | 64 |
| இந்தியா | 918.6 | 1263.7 | 1.9 | 37 |
| ஐக்கிய அமெரிக்கா நாடுகள் | 260.6 | 309.1 | 1.0 | 70 |
| இந்தோனேசியா | 194.6 | 252.9 | 1.6 | 44 |
| ஜப்பான் | 124.8 | 125.9 | 0.3 | 223 |
| பங்காளதேஷ் | 117.8 | 174.8 | 2.2 | 32 |
| நைஜீரியா | 108.5 | 190.0 | 3.0 | 23 |
| மெக்சிக்கோ | 91.8 | 124.2 | 2.1 | 33 |
| துருக்கி | 60.8 | 82.1 | 2.0 | 35 |
| தென் ஆபிரிக்கா | 40.5 | 61.5 | 2.2 | 32 |
| பிரான்ஸ் | 57.7 | 60.5 | 0.4 | 175 |

மூலம்: கல்வி வெளியீட்டு திணைக்களம் 1998,உயர்தர மானிடப் புவியியல் பகுதி 1

## 3.5 உலக சனத்தொகை மாற்றம்

உலக சனத்தொகையானது தொடர்ச்சியாக பல்வேறு மாற்றங்களுக்கு உட்படும் யுகத்தினுள் புகுந்துள்ளது.

## உலக சனத்தொகை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

உலக சனத்தொகை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் எல்லாக் காரணிகளும் பிறப்பு வீதம், இறப்பு வீதம், குடிப்பெயர்வு என்ற மூன்று காரணிகளுள் உட்படுத்தப்பட்டுள்ளது.

$$\text{பருமட்டான பிறப்பு வீதம்} - \frac{\text{வருடாந்த உயிர்ப்பிறப்புக்களின் எண்ணிக்கை}}{\text{நட்டாண்டு சனத்தொகை}} \times 1000$$

$$\text{பருமட்டான இறப்பு வீதம்} - \frac{\text{வருடாந்த இறப்புக்களின் எண்ணிக்கை}}{\text{நட்டாண்டு சனத்தொகை}} \times 1000$$

$$\text{தேறிய குடிப்பெயர்வு} - \frac{\text{குடிவரவு - குடியகல்வு}}{\text{நட்டாண்டு சனத்தொகை}} \times 1000$$

இம்மூன்று முக்கிய காரணிகள் மூலமும் சனத்தொகை மாற்றமடைவது முழு உலகிலும் ஒரே சமமாக காணப்படாததுடன் அது வலயத்துக்கு வலயம், நாட்டிற்கு நாடு வேறுபடும் என்பதையும் அறியலாம். அத்துடன் சனத்தொகை மாற்றத்துக்கு ஏதுவான காரணிகள் சிலவற்றை பின்வருமாறு காட்டலாம்.

1. உலகில் பல்வேறு நாடுகளில் ஏற்படும் யுத்தங்கள் காரணமாக சனத்தொகை வேறுபடல்.
2. பல்வேறு நாடுகள் கடைப்பிடிக்கும் சனத்தொகைக் கொள்கைகள்.
3. அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் சனத்தொகை வளர்ச்சி வேகம் மாற்றமடைதல்.
4. முழுமையாக நோக்கும் போது சனத்தொகை வளர்ச்சி வேகம் உலகில் வீழ்ச்சியடைந்துள்ளது.

**உலக சனத்தொகையில் ஏற்படும் மாற்றத்தை அவதானிக்கும் போது பின்வரும் காரணிகள் தெளிவாகின்றன.**

**சனத்தொகை வளர்ச்சி தொடர்பான மாற்றங்கள்**

- 2006 இல் உலக சனத்தொகை 7 பில்லியனை அண்மித்துள்ளது.
- அபிவிருத்தி அடைந்துவரும் பிராந்தியங்களில் 1950தில் உலக சனத்தொகையில் 68% மானோர் வாழ்ந்தததுடன் 1998ல் இது 80% வரை அதிகரித்தது.
- 2050 ஆகும் போது மொத்த சனத்தொகையில் 88% அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணப்படுவதுடன் அதில் ஆசியா முதன்மை பெறும்.
- 2006இல் சீனாவில் சனத்தொகை 1,311.4 மில்லியனாக காணப்பட்டதுடன் 2050 ஆகும் போது சீனாவையும் மிஞ்சி இந்தியாவின் சனத்தொகை வளர்ச்சி அடையும்.

**உலக சனத்தொகை வளர்ச்சிவீத வேகம் தொடர்பான மாற்றங்கள்.**

- சனத்தொகை வளர்ச்சி வீத வேகம் உலக ரீதியாக குறைந்து செல்கின்றது.
- அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சனத்தொகை வளர்ச்சி வீத வேகம் விரைவாக குறைகிறது.
- ஐரோப்பிய நாடுகள் சிலவற்றின் வளர்ச்சி வீதம் மறைபெறுமானத்தை கொண்டுள்ளது.
- அந்நாடுகளின் வளர்ச்சி மந்த கதியில் நடைபெறுவதுடன் சில பிரதேசங்களில் எவ்வித அதிகரிப்பும் ஏற்படாதுமுள்ளது. உதாரணமாக 2006இல் அவுஸ்திரேலியாவின் வளர்ச்சி வீதம் 0.0 ஆகும்.
- அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சனத்தொகை வளர்ச்சி வீதம் மிகவும் குறைந்த அளவிலேயே நடைபெறுகின்றது. ஆனால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சீனாவில் 2006 ஆகும் போது 0.6% மாக குறைந்துள்ளது. இவ்வாறு வளர்ச்சி வீதம் குறைவதற்கு அரசு மேற்கொண்ட குடும்பமொன்றிற்கு ஒரு பிள்ளை என்ற எண்ணக்கரு நடைமுறைப்படுத்தப்பட்டமையே செல்வாக்கு செலுத்தியுள்ளது.
- ஒன்றுக்கொன்று வேறுபாடான நிலைமைகள் காரணமாக சனத்தொகை வளர்ச்சி அடைய எடுக்கும் காலம் வலய அடிப்படையில் வேறுபடுகின்றது. உதாரணமாக யப்பானில் சனத்தொகை இரட்டிப்படைவதற்கு 233 வருடங்கள் எடுப்பதுடன் நைஜீரியாவில் இது 23 வருடங்கள் ஆகின்றன.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக.

## உலக நகர சனத்தொகையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

அட்டவணை 3.7 தெரிவுசெய்யப்பட்ட நாடுகளில் சில நகரங்களின் சனத்தொகையில் ஏற்பட்ட மாற்றம். 1992 - 2006 வரை

| வலயம் / நாடு | 1992 (%) | 2006 (%) | 2008 (%) |
|---|---|---|---|
| **அபிவிருத்தி அடைந்த நாடுகள்** | | | |
| ஐக்கிய அமெரிக்கா | 74 | 79 | 82 |
| ஐக்கிய இராச்சியம் | 90 | 89 | 90 |
| சுவீடன் | 83 | 84 | 85 |
| பிரான்சு | 73 | 76 | 77 |
| ஜேர்மனி | 86 | 88 | 74 |
| **அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள்** | | | |
| ஆபிரிக்கா | | | |
| மாலி | 18 | 30 | 32 |
| தன்சானியா | 19 | 32 | 25 |
| தென் ஆசியா | | | |
| பங்களாதேஷ் | 13 | 23 | 27 |
| நேபாளம் | 7 | 14 | 17 |
| கிழக்காசியா | | | |
| சீனா | 21 | 37 | 43 |
| தென் கொரியா | 65 | 82 | 81 |

மூலம்: World Population Data Sheets 1992, 2006

## இந்த அட்டவணை வெளிப்படுத்தும் தகவல்கள்

- முழு உலகிலும் நகர சனத்தொகை விரிவடைந்து வருகிறது.
  உதாரணம்: 1992ல் ஐக்கிய அமெரிக்காவின் சனத்தொகை 74% ஆக இருந்து 2006ல் இது 79% ஆகவும் 2008 - இல் 82% ஆகவும் அதிகரித்துள்ளது.
- 1992ல் பங்களாதேஷின் நகர சனத்தொகை 13% ஆக இருந்து 2006ல் 23% மாகவும் 2008 - இல் 27% ஆகவும் அதிகரித்துள்ளது.
- நகர சனத்தொகை மாற்றத்தில் காணக்கூடிய இன்னொரு இயல்பு அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் நிலைமைகள் ஒன்றுக்கொன்று வேறுபடுவதாகும்.
- கரையோரத்தை அண்மித்து நகரங்கள் உருவாதல்.
  உதாரணம்: டாக்கா, புவனர்ஸ்அயர்ஸ், ஷாங்காய்
- வெவ்வேறாக உருவான நகரங்கள் நேர்கோட்டு அடிப்படையில்

விருத்தியடைதல்.

- 2050ன் எதிர்பார்ப்பின்படி மிகப் பெரிய 10 நகரங்களுள் பெரும்பாலானவை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணப்படல்.
  உதாரணம்: லாகோஸ் (நைஜீரியா) மும்பாய் (இந்தியா) டாக்கா (பங்களாதேஷ்) சாயோபோலோ (பிறேசில்) கராச்சி (பாகிஸ்தான்) டில்லி (இந்தியா) ஜகார்த்தா (இந்தோனேசியா)

உரு 3.10 கரையோரத்தை அண்டிய நகரமொன்று



## வயதுக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றம்

- பொதுவாக உலகம் முழுவதிலும் பிறப்பு வீதம், கருவளவீதம் என்பன குறைவடைந்து செல்லும் போக்கினை காணலாம்.
- பிறப்பில் ஆயுள்எதிர்பார்ப்பு கூடிச் செல்வதைக் காட்டுகிறது.
- சிசுமரண வீதம் குறைவடைதல். (உயர்ந்த சுகாதார மருத்துவ வசதிகள்)
- வயது முதிர்ந்தோரின் அளவு கூடுதல்.
- ஐரோப்பிய நாடுகளில் வயது முதிர்ந்தோரின் தொகை ஆசிய நாடுகளை விட உயர்ந்த நிலையில் காணப்படுகிறது.
- வயதுக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக அபிவிருத்தி அடைந்த நாடுகளின் சனத்தொகைக் கூம்பின் மேற்பகுதி அகன்றதாக மாற்றமடைந்துள்ளது.
- எதிர்காலத்தில் சனத்தொகை அமைப்பின் விருத்தியில் நிலைத்த தன்மை ஏற்படக்கூடியதாக இருப்பதால் கூம்பு வடிவம் பெறும் எனக் கூறப்படுகிறது.
- அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பு 60-70 வயது வரை காணப்படுவதுடன் ஐரோப்பிய நாடுகளில் 80-85 வரை இது உள்ளது. உதாரணமாக யப்பானில் ஏறக்குறைய 80 வருடங்கள்.
- பெண்களின் தொகை அதிகரித்து, ஆண்களின் தொகை குறைவடைந்துள்ளது.

## அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சனத்தொகை வளர்ச்சியால் ஏற்படும் பிரச்சினைகள்

| பொருளாதாரம் | விவசாயம் | சமூகம் | சுகாதாரம் |
|---|---|---|---|
| 1.வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு செலவு ஏற்படல்.<br>2.உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யக்கூடிய நிதி வசதி அளிக்க வேண்டி ஏற்படல். | 1. தனியாள் நில நுகர்வின் அளவு குறைதல்.<br>2. நிலம் துண்டாடப் படல், காடழிப்பதால் காட்டு வளம் அழிதல். | 1.வீட்டுப் பற்றாக் குறை.<br>2.மூளைசாலிகளின் வெளியேற்றம்.<br>3.சேரிகள் உருவாதல்.<br>4.குப்பை கூளங்கள் அதிகரித்தல். | 1.தொற்று நோய்கள் பரவல் துரிதமாதல்.<br>2.சுத்தமான குடிநீரைப் பெற முடியாமை. |

உரு 3.11 நகரப் பிரதேசத்தின் வீடுகளின் நெரிசல்



## 3.6 உலகின் குடிப்பெயர்வுப் போக்குகள்

மனிதனின் நிலையான வதிவிடத்தை மாற்றியமைக்கும் புவியியல் ரீதியான நடவடிக்கையை குடிப்பெயர்வு எனலாம். இதனை சூழலுக்கேற்ற முறையில் மாற்றமடையும் முறையாகவும் வரைவிலக்கணப்படுத்தலாம்.

## குடிப்பெயர்வு வகைகள்

உலக வரலாற்றில் ஏற்பட்ட குடிப் பெயர்வுகளை இரண்டு வகையாக நோக்கலாம்.

1. உள்நாட்டுக் குடிப் பெயர்வு.
2. வெளிநாட்டுக் குடிப் பெயர்வு.

## உள்நாட்டு குடிப்பெயர்வு

இப்பெயர்வு முறையை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

| | | |
|---|---|---|
| கிராமம் | - | கிராமம் |
| நகரம் | - | நகரம் |
| நகரம் | - | கிராமம் |
| கிராமம் | - | நகரம் |

மேலுள்ள பட்டியலின்படி பல்வேறு காரணங்களினால் உள்நாட்டு நகர்வு ஏற்படுகின்றது. யுத்தபயம், வேலைவாய்ப்பைப் பெறல், புதிதாகக் காணிகளை வாங்கும் நோக்கம் போன்ற காரணிகள் கிராமத்திலிருந்து கிராமத்திற்கு நகர்வதற்கு காரணமாகிறது. நகரத்திலிருந்து நகரத்திற்கு நகர்வதில் பல்வேறு விதமான வசதிகளைப் பெற்றுக் கொள்ளல், தொழில் இடமாற்றம், உயர் வாழ்க்கைத்தரம், உயர்கல்வி பெறும் நோக்கம், புதிய தொழில் வாய்ப்புக்களைப் பெறல் போன்றவை செல்வாக்கு செலுத்துகின்றன.

நகரத்திலிருந்து கிராமத்திற்கு நகர்வதில் பின்வரும் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. பாரம்பரிய சூழலில் வாழ்வதற்கான விருப்பம், ஓய்வைச் சிறந்த முறையில் கழித்தல், பரம்பரையாகக் காணப்படும் சொத்துக்களைப் பாதுகாத்தல், நகர இயந்திர வாழ்க்கையில் இருந்து மீளல் போன்றவை. பெரும்பாலும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இவ்வாறான நகர்வு ஏற்படும்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் கிராமத்திலிருந்து நகரத்திற்கு நகர்தல் பெரும்பாலும் நிகழும். உயர்கல்வியைப் பெறல், போக்குவரத்து வசதி, உயர் வாழ்க்கைத் தரம் போன்ற காரணங்களால் இவ்வாறான நகர்வு ஏற்படுகின்றது.

## வெளிநாட்டு குடிப்பெயர்வு

| | | |
|---|---|---|
| அபிவிருத்தி அடைந்த நாடு | - | அபிவிருத்தி அடைந்து வரும் நாடு |
| அபிவிருத்தி அடைந்து வரும் நாடு | - | அபிவிருத்தி அடைந்த நாடு |
| அபிவிருத்தி அடைந்த நாடு | - | அபிவிருத்தி அடைந்த நாடு |
| அபிவிருத்தி அடைந்து வரும் நாடு | - | அபிவிருத்தி அடைந்து வரும் நாடு |

## வெளிநாட்டு குடிப்பெயர்வு தொடர்பான உதாரணங்கள் சில

- ஆலோசகர்களாக செயற்திட்டங்களுக்கு தமது சேவையை வழங்குவதற்கு வருபவர்கள், விசேட நிகழ்வுகள், முதலீடுகளுக்காக வருகின்ற முதலீட்டாளர்கள், உல்லாசப்பிரயாணிகள். உயர் வருமானமுடைய நாடுகளிலிருந்து வருகின்றவர்கள் ஆகியோர் அபிவிருத்தி அடைந்த நாடுகளிலிருந்து அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்குத் தற்காலிகமாக இடம்பெயர்கின்றவர்கள் ஆவர்.

- தேர்ச்சி அடிப்படையான ஊழியம் - அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கும் நகர்தல். உதாரணம் வைத்தியர், பொறியியலாளர், தொழினுட்பவியலாளர்கள், நில அளவையாளர் போன்றோர் இடம் பெயர்தல்.

- இது தவிர உயர் கல்வியைப் பெற அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலிருந்து செல்வோர் தகுதி பெற்ற பின் அந்நாடுகளிலே நிலையாக தங்குதலும் இன்று பரவலாக நடைபெறுகின்றது. உதாரணம்: ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா. அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கான இடப்பெயர்வு.

- சனச்செறிவு கூடிய ஐரோப்பிய நாடுகளிலிருந்து வசதிகள் கூடிய ஏனைய அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு இடம்பெயர்தல்.
  உதாரணம்: ஐக்கிய இராச்சியத்திலிருந்து கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு இடம்பெயர்தல்.

- தேர்ச்சியற்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் ஊழியம் வேறு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு நகர்தல்.
  உதாரணம்: மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஹோட்டல் வேலைகளுக்கு வீட்டு வேலைகளுக்கு செல்லல்.
  பல்வேறு காரணிகளால் தமது எல்லைகளுக்கு அப்பால் அகதிகளாக செல்லல்.
  உதாரணம்: எதியோப்பியா, ருவாண்டா.

“எங்கள் அமெரிக்க மக்களைப் பராமரிப்போர் மூன்றாம் உலக நாடுகளிலிருந்து வரும் வைத்தியர்களே” - என்ற அமெரிக்க தலைவர் ஒருவரின் கூற்றிலிருந்து வெளிநாட்டு பெயர்வு காரணமாக இன்று உலகக் கிராமம் உருவாகியுள்ளமை புலப்படுத்தப்படுகிறது. அதே போல் வெளிநாட்டு நகர்வு ஒரு பகுதியினருக்கு சாதகமானதாக அமையும் போது மற்றப் பகுதியினருக்கு பாதகமானதாக அமைகின்றது.

## குடிப்பெயர்வு ஏற்படுவதற்கான காரணிகள்

குடிப் பெயர்வுக்கான காரணங்களை நோக்கும் போது இழுத்தல், தள்ளல் வாதம் முக்கியம் பெறுகின்றது. உலகில் எங்கு குடிப்பெயர்வு இடம் பெற்றாலும் அது பின்வரும் இரு காரணிகளில் ஒன்றில் உள்ளடக்கப்படும்.

| தள்ளல் காரணிகள் | இழுத்தல் காரணிகள் |
|---|---|
| ● வேலையின்மை<br>● வீடின்மை<br>● வளி மாசடைதல்<br>● சூழல் மாசடைதல்<br>● ஒலி மாசடைதல்<br>● குறைந்த கல்வி மட்டம்<br>● குறைந்த சுகாதார வசதிகள்<br>● குறைந்த உட்கட்டமைப்பு வசதிகள்<br>● சீர்கேடான போக்குவரத்து<br>● யுத்தமும் பயங்கரவாதமும்<br>● அரசியல் உறுதியின்மை<br>● இயற்கை அனர்த்தம்<br>● கொடிய நோய்கள்<br>● அரசியல் உறுதிப்பாடு<br>● இயற்கை அனர்த்தம் குறைவு | ● வேலைவாய்ப்புக்கள் உருவாதல்<br>● உயர் வருமானத்தை பெறக்கூடிய உயர்ந்த வாழ்கைத் தரத்தை அடைய முடிதல்.<br>● உயர் மட்ட பயிற்சிகளைப் பெறக்கூடிய சந்தர்ப்பம்.<br>● உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படல்.<br>● ஆரோக்கியமான சூழல்.<br>● உயர் கல்விக்கான வாய்ப்புக்கள் காணப்படல்.<br>● மனங்கவரக் கூடிய சுகாதார வசதிகள்<br>● உயர் சமூக அந்தஸ்தைப் பெறக்கூடிய வசதிகள்<br>● உயர் தொழினுட்பத்தால் பெறக்கூடிய அனுகூலங்கள். |

## குடிப்பெயர்வின் விளைவுகள்

- மூளைசாலிகளின் வெளியேற்றம்.
- ஊழியப்படை வெளியேற்றம்.
- அகதிகள் உருவாதல்.
- சனத்தொகையின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படல்.
- நகர சனத்தொகை விருத்தி.
- சமூக சீர்கேடுகள்.
- கலாசார சீர்கேடுகள்
- பெற்றோர் பிள்ளைகள் தொடர்பு குறைவடைதல்

உரு 3.12 அகதிகள்



சர்வதேச குடிப்பெயர்வின் காரணமாக நாடுகளுக் கிடையிலே மூளைசாலிகளின் வெளியேற்றம் ஏற்படுகின்றது. அது அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கான மூளைசாலிகள் வெளியேற்றம், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான மூளைசாலிகளின் வெளியேற்றம் என இரண்டாக பிரிக்கலாம். இரண்டாம் உலகமகா யுத்தத்தின் விளைவாக ஐரோப்பிய நாடுகளில் தொழில் சார்ந்த நடவடிக்கைகள் விரிவடைதல் பொருளாதார நடவடிக்கைகள் விருத்தியடைதல் போன்றவை நடைபெற்றன. மிக விரைவாக அந்நாடுகளுக்கு மூளைசாலிகளின் வெளியேற்றம் நடைபெற்றது. ஐரோப்பியர் அமெரிக்காவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் பெரும் தொகையாக குடிபெயரத் தொடங்கினர். ஆசியர் சிறிய அளவில் ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்கா கண்டத்திற்கும் குடிபெயர்ந்தனர். குடிப்பெயர்வால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மூளைசாலிகளுக்கு பற்றாக்குறை ஏற்பட அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு சாதகமாய் அமைந்தது. மூளைசாலிகளின் வெளியேற்றமும் ஊழியத்தின் வெளியேற்றமும் ஆதிகாலம் தொட்டே நடைபெற்று வந்துள்ளது. எனினும் சமூக அமைப்பு விரிவடைவதால் இம்முறை மாற்றமுற்றது. பொருளாதார தொழில் ரீதியான நன்மை கருதி மத்திய கிழக்கு, கொரியா போன்ற நாடுகளுக்கு தற்காலிக குடிப்பெயர்வு அதிகரித்துள்ளது. உதாரணமாக தேர்ச்சி மட்டம் குறைந்த வீட்டுப் பணியாட்களின் சேவையைக் கூறலாம்.